புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# பாரதிதாசன் கவிதைகளில் கைம்மைப் பெண்களின் நிலைப்பாடு

முனைவர் ஞா. சுஜாதா
உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ்த்துறை
த.கி.மு. மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
வேலூர் -632 001

ஆய்வுச்சுருக்கம்

பெண்ணின் முன்னேற்றம் குறித்து பாடியவர் பாரதியார் எனில், பெண்ணின் கைம்மைக் கொடுமைகளை எடுத்துரைத்தவர் பாரதிதாசன் என்பதே பொருத்தமான ஒன்றாகும். தமிழ் இலக்கியத்தில் தமிழ் அறிஞர்களும் கவிஞர்களும் அவரவர் நோக்கில் பெண்களுக்கான நிலைப்பாட்டினை எடுத்துரைக்க அச்சப்பட்டதில்லை என்பதற்கு, அவரவரின் படைப்புகளே சான்றாக விளங்குகின்றன. பாரதியின் வழி வந்தவர் பாவேந்தர் பாரதிதாசன். இவர் தம் கவிதைகளில் பெண்ணிற்காக குரல் கொடுக்கும் நிலைகளில் ஒன்றான ‘கைம்பெண்களின் நிலை’யைப் பற்றி ஆராய்வதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

## முன்னுரை

பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள் வேதகாலத்திலோ, சங்ககாலத்திலோ மிகப் பெரிய அளவில் நிகழவில்லை என்று கூறமுடியாது. சில வேறுபாடுகள் இருந்திருக்கின்றன. ஆனால், சங்ககாலத்திற்கும் இக்காலத்திற்கும் இடையேயுள்ள இடைப்பட்டக் காலத்தில் பெண்களுக்கான அடக்குமுறைகள் மிகுதியாகியுள்ளன. அவற்றுள் மிகவும் கொடுமையானது கைம்பெண்களின் வாழ்வாகும்.

## கைம்மைப் பெண்கள்

பொதுவாக விதவைகள் மதிப்பற்ற நிலையில் அடக்குமுறைக்கு ஆளாகி, ஆதரவு குன்றி, கைம்மைக் கோலம் பூண்டு, கதியற்று நடைப்பிணங்களாக வாழ்ந்தனர். கணவனை இழந்த பெண்கள் சமூகத்தில் எக்கோலம் பூண்டிருந்தனர் என்பதை அவர்களின் துயர நிலையினை எடுத்துரைத்து, கல் நெஞ்சம் படைத்த சமூகத்தாரின் மன நிலையை உணர்ந்த கைம்மைப் பெண் கூற்றாகப் பாரதிதாசன்,

> “எனை மணந்தார் இறந்தார்; என் குற்றமல்ல
> இறந்தவுடன் மங்கல நாண், நல்லாடைகள்
> புனைமலர் குங்கும அணிகள் போனதுண்டு
> பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டே”[1]

என்று மன வேதனையுறும் கைம்பெண்ணை அறியமுடிகிறது.

## இந்திய கைம்பெண்களின் நிலை

இந்திய விதவைகளுக்கு மொட்டை அடித்து, வெண்நிற ஆடை அல்லது பழுப்பு நிற ஆடை தந்து துறவியாக்கும் வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டதாகும். சென்ற நூற்றாண்டின் இறுதி வரை இவ்வழக்கம் இருந்து வந்தது. குழந்தை நிலையில் இருக்கும் விதவைகள், நிச்சயம் செய்யப்பட்டுத் திருமணம் நின்றுபோன பெண்கள் கூட இந்நிலைக்கு ஆளானார்கள். இதனை “விதவைகளை மொட்டையடித்துத் துவராடை கொடுத்ததின் நோக்கம் என்ன? முதலாவது இறந்துபோன தன் கணவனுக்கு, மனைவி உயிர் வாழும்வரை உண்மையான கற்புடையவளாக

இருக்கவேண்டும்; பிற ஆடவர்கள் அவளைக்கண்டு காமுறுதல் கூடாது; அதற்காக அவளது அழகைச் சிதைக்க வேண்டும். இரண்டாவது பெண்ணுக்குக் காம உணர்ச்சி தோன்றாமல் தடுக்க வேண்டும்; அதன் பொருட்டு அவள் உப்பு, புளி, காரம் இல்லாமல் உண்ணவேண்டும்; குளிர்ந்த நீரில் தலை முழுகிக் குளிக்க வேண்டும்; காம உணர்ச்சியை அவள் உள்ளத்தில் எழாமல் நசுக்க வேண்டும்''[2] என்று சமூகத்தில் மக்கள் கட்டுப்பாட்டோடு இருந்தனர் என்பதை உணரமுடிகிறது.

மனிதனைப் படைத்து இளமையும் உணர்வையும் வழங்கியது இயற்கை அன்னை. ஆனால் சாத்திரங்களைக் கூறி, இயற்கை நியதிகளில் இருந்து விடுபட்டுச் செயல்படத் தொடங்கியது மானிட சமூகம் என்ற கருத்தை பாரதிதாசன்,

''இளமை தந்தாய், உணர்வு தந்தாய் இன்பங் காணும்
இன்னுயிரும் தந்திட்டாய் இயற்கைத் தேவி
வளமையற்ற நெஞ்சுடையார் இந்நாட்டார்கள்
மறுக்கின்றார் காதலினைக் கைம்மைக் கூறி''[3]

என்று கோடிட்டுக் காட்டுகிறார்.

விதவைகள் சமூகத்தில் ஒதுக்கப்பட்டால், அவள் எந்த மங்கள நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளக்கூடாது; எதிரில் வரக்கூடாது; வந்தால் அபசகுனம் என்று பல்வேறு அவமானப் பெயர்கள் பெறலாயினர். இவ்வாறு சமூகமும் சமயச் சாத்திரங்களும் அவளை உள்ளத்திலும் உடலிலும் நசுக்கி உயிரோடு கொலை செய்ய முயன்றன. இத்தகைய கைம்மைத் துயரை விட உடன்கட்டை ஏறி இறந்துவிடலாம், அதுவே மேலாது என்று சங்ககால மகளிர் எண்ணினர். இதனை,

''பல் சான்றீரே! பல் சான்றீரே!
'செல்' எனச் சொல்லடு, ஒழிக என விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே!
……………………..
உயவல் பெண்டிரேம் அல்லேம் மாதோ'[4]

எனப் பெருங்கோப்பெண்டு தன் கருத்தை வெளிப்படுத்துகிறார். குழந்தை மணத்தினால் கைம்மை ஆகிய பெண்ணை,

''கோரிக்கை அற்று கிடக்குதண்ணே – இங்கு
வேரிற் பழுத்த பலா''[5]

என்று பாரதிதாசன் வருந்திக் கூறுகிறார்.

கைம்மைத் துயர்

மகளிரை வாட்டும் கைம்மைத் துயரை, வேரறச் சாய்க்கும் தன் உயர் முயற்சியின் முதல் நிலையாக சமுதாயம் கொழுநனை இழந்த மகளிர்க்கு இழைத்த கொடுமைகள் எண்ணிலடங்காது. அவற்றை,

''செம்பொற் சிலை இக்காலே
கைம்பெண்ணாய் போன தாலே
திலகமோ குழலில் மலர்களோ அணியின்
உலகமே வகைகள் – பலவும் புகலும்
தரையில் படுத்தல் வேண்டும்
சாதம் குறைத்தல் வேண்டும்''[6]

என்னும் கவிதை வரிகள் மூலம் அறியலாம்.

கைம்மை மறுமணம்

பெண்கள் முன்னேற்றத்தில் தலையாய கூறாக பாரதிதாசன் கைம்மை மணத்தை முன் வைக்கிறார். கைம்மைக்குக் காரணம் குழந்தை மணம் என்பதையும் எடுத்துக்கூறுகின்றார். பாரதிதாசன் பார்வையில் பெண்ணினத்துக்குத் தமிழ்ச் சமுதாயம் இழைத்திருக்கும் அநீதிகளில் தலையாயது கைம்மைக் கொடுமையாகும். இதனை,

''வையகம் மீதினில் தாலி யிழந்தவள்
மையல் அடைவது கூடுமோ
துய்யமணாளன் இறந்தப் பின் மற்றவன்

தொட்டதை வைதீகம் ஏற்குமோ''[8]
எனக் கருதும் சமூகத்தினைச் சாடுகின்றார்.

மேலும் ''சமுதாயப் புரட்சியில் பெண்களுக்காகப் பாரதிதாசன் போரிட்டவற்றுள் கைம்மை ஒன்றே தலையாயது''[9] என்று கூறுகின்றார் மா.செல்வராசன்.

ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் பேசும் தற்காலச் சமுதாயம், கணவனை இழந்த பெண்களுக்கு இழைத்திருக்கும் கொடுமைகளைக் கண்டு குமுறும் பாரதிதாசனின் சிந்தனைச் சிதறல்கள்தான் கைம்மை பற்றிய கவிதைகள். இம்மை உலகில் ஆணைப் போலப் பெண்ணும் எல்லா இன்பங்களையும் குறைவின்றி நுகர்தல் வேண்டும் என விழையும் முதன்மைக் கூறுகளில் ஒன்றாக கைம்மை மறுமணத்தை வற்புறுத்துகின்றார்.

'கைம்மைப் பழி' என்னும் கவிதையில் 'வேரில் பழுத்த பலா, குளிர் தருகின்ற வட்ட நிலா எனவும், சீ என்று இகழ்ந்திட்ட நறுங்கனி எனவும், இனிய தொனி எனவும், தொடக்கூடாது எனத் தள்ளி வைக்கப்பட்ட தேன்குடம் எனவும், சூடப்படாது என ஒதுக்கி வைக்கப்பட்ட பூமாலை எனவும், கைம்பெண்களை இச்சமூகம் கருதுகின்றது எனப் பாரதிதாசன் சுட்டிக்காட்டுகிறார்.

மனைவியை இழந்த கணவனுக்கு மறுமணம் செய்யத் துடிக்கும் சமுதாயம், கணவனை இழந்த பெண்களின் உணர்வுகளை மதிக்க மறுக்கும் விதண்டாவாதப் போக்கைத் தம் கவிதைகளில் சாடியுள்ளார். இதனை,

''துணைவி இழந்தபின் வேறு துணைவியைத்
தேடுமோர் ஆடவர் போல் – பெண்ணும்
துணைவன் இறந்தபின் வேறுதுணை தேடச்
சொல்லிடுவோம் புவி மேல''[10]

எனவும்,

''மறுமணம் புரிவதால் வராதொரு கேடு''[11]
''மறுமணமில்லாப் பெண் கெடுவதும் கூடும்''[12]

எனவும் கூறி மறுமணத்தை வரவேற்கிறார்.

''மனைவி இறந்த மறு மாதமே பெண் தேடுவான் ஆண் பிள்ளை. ஆனால் பெண் முணுமுணுப்பின்றி கண்ணீர் சிந்தி சிந்தி, சிறுக சிறுக, அணு அணுவாக நலியும் விதவை பெண்ணியம்''[14] என நெ.து.சுந்தரவடிவேலு சுட்டிக்காட்டுதலைக் கொண்டு பாரதிதாசன் முயற்சி இன்றியமையாமை என்பதை உணரமுடிகின்றது.

கைம்பெண், சமூக மூட வழக்கச் சாத்திரங்களுக்கு இலக்காகி நைந்துப்போகத் தான் வேண்டுமென உறுதிக்கொண்ட சமூகத்தைப் பாரதிதாசன் கடுமையாகச் சாடுகிறார். அது மட்டுமின்றி கைம்மைக்கு முடிவு தேடவும் முயல்கின்றார். இதனை,

''பேடி வழக்கங்கள் மூடத்தனம் – இந்தப்
பீடைகளே இங்குச் சாத்திரங்கள்''[13]

என்று இரக்கமில்லாதார் கூடி உருவாக்கிய ஓட்டைச் சாத்திரங்களை உதறி தள்ளிவிட்டு, காதல் ததும்பும் பெண்களுக்கு மறுமணம் செய்து வைக்கத் தயங்காதீர் என அறிவுறுத்துகின்றார். விதவை மறுமணத்தில் பாரதிதாசன் மட்டுமின்றி, அறிஞர் பலருக்கு உடன்பாடு உண்டு எனவும், கைம்மை மணத்தை ஏற்க மறுக்கும் சமுதாயத்திற்கு,

''மறுமணம் புரிவது சிறுமை என்ற றைவது
குறுகிய மதியென – அறிஞர் மொழிவர்''[14]

என்று தாம் கொண்ட சிந்தனைக்கு மேலும் அரண் சேர்க்கிறார்.

பிரிவு என்னும் கொடுமையை உணர்ந்துதான் சங்ககாலத்தில் பாலைத் திணையைப் படைத்துப் 'பிரிதலும் பிரிதல் நிமித்தமும்' என்று கூறினர். அதில் தலைவன் அல்லது காதலன் வந்திடுவான் என்ற எதிர்ப்பார்ப்போடு தலைவி காத்திருந்தாள். கணவனை இழந்த பெண்கள், கணவன் வரமாட்டான் எனத் தெரிந்தும் எதற்கு இந்த சமூகம் அவர்களைப் பிரிவில் காக்க வைத்து, ஏங்க வைத்து அவளைச் சமூகத்தின் அவமானச் சின்னங்களாய் நிலை நிறுத்தியது என்பதைப் பாரதிதாசன் கவிதைகள் வழி அறியமுடிகின்றது.

### கைம்மை மணத்தில் ஆடவரின் பங்கு

விதவை மறுமணத்தை பல நோக்கில் வலியுறுத்தும் பாரதிதாசன், அதனைப் பகுத்தறிவுப் போக்குக் கொண்ட இளைஞரின் கையில் ஒப்படைக்கிறார். இளைஞர் எழுச்சிக்கொண்டு முன்

வந்தாலொழிய, தான் எதிர்பார்க்கும் விளைவு விரைவில் ஏற்படாது எனக் கருதுகிறார். ஆதலால், தம் கவிதைகளில் மறுமணத்தில் ஆதரவு தரும் முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர் பலரைப் படைத்து உலவவிடுகின்றார்.

'கைம்மை நீக்கம்' என்னும் கவிதையில் வரும் தலைவனும் முற்போக்கு எண்ணம் கொண்டவன். அவனும் விதவைப் பெண்ணொருத்தியை மணம் செய்ய துணிந்தவனாகக் கைம்பெண்ணிடம் வேண்டுகிறான்.

"கருத்தொரு மித்த போது
கட்டுக்கள் என்ப தேது?
கைம்மை கூறும் அதிசய மனிதர்கள்
செம்மையாகும்படி செய மனதுவை அடி நீ"[15]

என அத்தலைவன் தன் காதலுக்கிசைந்த விதவைப் பெண்ணுக்கு ஊக்கம் கொடுக்கிறான்.

மனைவியின் தவிப்பினையும், இச்சமூகம் அவளைத் துன்புறுத்தக் காத்திருக்கும் சூழலையும் உணர்ந்த கணவன் இறக்க நேரிடும் நிலையில் கூறுவது,

"கடும் பிணியாளன் நான் இறந்தபின்
கைம்பெண்ணாய் வருந்தாதே பழி என்றன்மீதே
அடஞ்செய்யும் வைதீகம் பொருள் படுத்தாதே
ஆசைக்குரியவனை நாடு மகிழ்வோடு தார்சூடு
நலம் தேடு"[16]

என்று கூறுகிறான்.

பெண்களுக்கு ஆண்கள் அவர்களின் வாழ்வில் புதிய ஒளியினை ஏற்படுத்தித் தருவதைப் போல கைம்பெண் நலம் பெற இளைஞர்கள் முன் வருமாறு அழைக்கின்றார்.

மறுமணத்திற்குப் பெற்றோர்கள் எழுப்பும் தடுப்புச்சுவர் ஒருபுறம் துன்புறுத்துகிறதென்றால், ஊரார் எதிர்ப்புப் பன்மடங்காகி அவர்களை வாட்டி வருத்துகின்றது. இதனை,

"சாதியிலுன்னை விலக்கிடுவோம் – உன்
தந்தையின் சொத்தையும் நீ இழப்பாய் – நம்
ஆதி வழக்கத்தை மீறுகின்றாய் – தாலி
அறுத்தவளை மணம் ஒப்புகின்றாய்"[17]

என்று மறுமணத்தை எதிர்க்கும் சமூகக் கொடூரப் போக்கினை எடுத்துக்கூறினார். அப்போக்கின் விளைவாக கைம்பெண்ணும், அவள் காதலனும் ஒன்றாகக்கூடி ஒரே நேரத்தில் 'மணம் எங்கள் இஷ்டம்' என்று சாத்திரம் பார்க்கும் சமூகத்திற்குத் தகுந்த பதிலைப் பாரதிதாசன் எடுத்துரைக்கிறார்.

முடிவுரை

இரு கையும் தட்டினால்தான் ஓசை எழும். கைம்பெண் மறுமணம் ஆணும் பெண்ணும் ஒப்பும் வழியே நிறைவேற முடியும். இதனை நன்குணர்ந்தவர் பாரதிதாசன். சமுதாய கட்டுகளுக்குத் தலைவணங்கி, ஒதுங்கிப்போகும் பெண்ணினத்தின் நாடித்துடிப்பினை உணர்ந்து, தம் கவிதைகளில் காதல் உள்ளம் கொண்டவராக, மறுமணம் ஏற்று வாழ விழையும் துடிப்புள்ள மகளிர் பலரை காணமுடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி – 1, பக்.73-74
2. சி.என்.குமாரசாமி, பெண்ணிய நோக்கில் பாரதி, ப.304
3. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி – 1, ப.74
4. ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ), புறம், பா.246
5. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி – 1, ப.86
6. மேலது, ப.74
7. மேலது, ப.33

8. *மா.செல்வராசன், பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி, ப.94*

9. *பாரதிதாசன் கவிதைகள், தொகுதி – 1, ப.107*

10. *மேலது, ப.53*

11. *மேலது, ப.54*

12. *நெ.து.சுந்தவடிவேலு, புரட்சியாளர் பெரியார், ப.132*

13. *பாரதிதாசன் கவிதைகள், தொகுதி – 1, ப.87*

14. *மேலது, ப.118*

15. *மேலது, ப.121*

16. *மேலது, ப.94*

17. *மேலது, ப.84*

*துணைநூற்பட்டியல்*


1. *பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் (நான்கு தொகுதிகள்), ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை. 1995.*
2. *குமாரசாமி.சி.என்., பெண்ணிய நோக்கில் பாரதி, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. 1990.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********